



# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## ‘சிறுமைப்படும் நேரமே’ கிருபை பெற்றிடும் நேரம்!

‘சிறுமைப்படுகிறவர்கள்’ தாங்கள் சிறுமைப்படுவதை ஏற்றுக் கொள்வதே தாழ்மை! (சங்.10:17). இவ்வித தாழ்மைக்கே தேவன் தமது கிருபையை **‘அதிகமாய்’** பொழிந்து முடிசூட்டுகிறார்!


ஆகவே, உங்களுக்கு ‘சிறுமையை’ கொண்டு வந்த நபர் (அவருக்கே தெரியாமல்) தன்னோடு ‘கிருபை’ என்னும் பரிசுப் பெட்டியை கொண்டு வருகிறார்! மனப்பூர்வமாய் சிறுமையை ஏற்றுக்கொண்ட நீங்கள், அவரிடமிருந்து பரிசை அல்லது ‘அவர் மூலமாய்’ தேவன் அனுப்பிய ‘கிருபையைப்’ பெற்றுவிட்டீர்கள்! ஆகவே, அவருக்கு உள்ளத்தில் நன்றி கூறுங்கள்! இவர்களுக்கே, தன் கிருபையின் பரிபூரணத்திலிருந்து **“கிருபையின் மேல் கிருபை”** பெற்றிட தேவன் வழி செய்கிறார்! (யோவான்1:16). சகலத்திற்கும் போதுமான கிருபைக்குள் நடத்தும், ஆ... இந்த சிறுமையே நமது பாக்கியம்!!

*-tr*

ஆகஸ்ட் 2019

பெட்டகம் 21

பரல்கள் 8



# கல்லறை திறந்திடும் இரகசியம்!

இவ்வளவு பெரிய கல்லை 'எனக்காக' யார் புரட்டித் தள்ளிட முடியும்? என மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாய் மரியாளும், சலோமேயும் திகைத்து நின்றது போல்தான் இந்த மானிட வாழ்க்கை உள்ளது! கேள்விக்கு கிடைத்த அதிசய விடை எது தெரியுமா? **"எழுந்தார் இறைவன்!"** என்ற சுவிசேஷ - நற்செய்தியே ஆகும்! **"சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசு... உயிர்த்தெழுந்தார்!"** (மாற்கு.16:1-7).

பாவ சோதனையோ, கொல்கொதா போன்ற சூழ்நிலை அவச்சொல்லோ, தீதுமொழிகளோ, கசந்த காடியின் அனுபவங்களோ.... எதுவாயிருந்தால் என்ன? 'தன் சிலுவை' சுமந்து 'தன் சுயம்' சிலுவையிலறையுண்டு வாழ்ந்திடவே கவனம் கொண்டால்.... அவரோடு சிலுவையிலறையப்பட்ட யாதொருவனும், அவரோடு எழுந்திருப்பான்! (கலா.2:20). அவரோடு எவ்வித கொடிய சூழ்நிலையையும் 'ஜெயித்தெழுந்து' ஆளுகை செய்வான்!! இந்த அதிசய விடை தரும் **"சிலுவையின் உபதேசம்"** கெட்டுப் போகிறவர்களுக்கு பைத்தியமாய் தோன்றலாம்..... இரட்சிக்கப்படுகிற நமக்கோ, வாழ்வின் 'பெருங்கல்லையும்' புரட்டித் தள்ளும் தேவ பெலனாய் இருக்கிறது! (1கொரி.1:18). ஆமென்!

*-Ed*

**'பரலோக பொக்கிஷங்கள்'** வருடசந்தா ரூ.150.00
ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் வீதம் ரூ.125.00 அயல்நாட்டு சந்தா ரூ.900.00

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கிகணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** IndianBank-Koodal Nagar Branch,
A/c no: **502087685** IFSC Code: **IDIB000K150** (வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாச தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள், 207A- Zaheer Husain Street, Koodal Nagar,
(Thathaneri P.O.), MADURAI - 625 018, S.India. Cell: 9843049935 Ph (O) 0452 - 2662306,
**Email: rathnakumar.t@gmail.com** *தமிழ்வலைதளம்*: **paralogapokkishangal.com, tamil.cfcindia.com**
**You Tube : paralogapokkishangal**

## ஊழியனல்ல, தன் அடிமைகளுக்கே 'வெளிப்பாடு' தருகிறார்!

*பத்மு தீவிலிருந்த யோவான் அப்போஸ்தலன் 'கிறிஸ்துவின் ஊழியனாகிய' தனக்கு தேவன்* **'வெளிப்பாடு'** *தந்தார் எனக் கூறியே வெளி.1:1 துவங்குகிறது! இந்த வெளிப்பாடு, யோவானுக்கு மாத்திரமல்ல 'கிறிஸ்துவின் அடிமைகள்' அனைவருக்கும் தேவன் தருவார்! (வெளி.1:1). ஆம், கிறிஸ்துவின் ஊழியர்கள் என்பதற்கு மற்றொரு அர்த்தம்* **'கிறிஸ்துவின் அடிமைகள்'** *என்பதேயாகும். ஆகவே, இந்த ஒரே வார்த்தையில் அவருடைய அடிமைகள் என்றும்! அவருடைய ஊழியக்காரர்கள் என்றும்! பொருள்படும். ஒரு வேலைக்காரன் என்பதற்கும், ஒரு அடிமை என்பதற்கும் உள்ள வித்தியாசம் என்ன? இன்று 'அடிமைகள்' என எங்குமில்லை, ஆகவே அடிமைகளைக் குறித்து நமக்கு அதிகமாய் தெரிவதில்லை. ஆனால் முதலாம் நூற்றாண்டில், ஒரு ஊழியனுக்கும், ஒரு அடிமைக்கும் உள்ள வித்தியாசத்தை எல்லோரும் அறிந்திருந்தார்கள்.*

> ஒரு ஊழியன், சம்பளம் பெறுவான். அதை அவன், ஒவ்வொரு மாதமும் பெற்றுக்கொள்வான். தன்னுடைய மாத சம்பளம் அவனுக்கு வரவில்லையென்றால், தன் வேலையிலிருந்து நின்று விடுவான். ஒரு அடிமையோ, ஒருபோதும் சம்பளம் பெறுவதில்லை.

*'உரிமைகள்' என எது இருந்தாலும், அந்த உரிமைகள் அவனுக்கு கிடையாது! அடிமை, தன் ஜீவ காலமெல்லாம் ஊழிய பணி செய்து கொண்டே இருக்க வேண்டும்! தான் செய்த எந்த ஊழியத்திற்கும் 'யாதொன்றும்' அவன் எதிர்பார்த்திட முடியாது! ஒரு ஊழியக்காரன், யாரோ சிலர் தன்னை துன்புறுத்தும்போது ரோம அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்ய அதிகாரம் உண்டு. ஒரு அடிமையோ, அவன் தீமையாய் நடத்தப்படும்போது, அவன் யாரிடத்தில் சென்றும் தன் குறையை விண்ணப்பம் செய்திட இயலாது. தேவனுக்கு ஊழியக்காரர்கள் உண்டு! அவர்களோ, கர்த்தர் தங்களை பராமரித்து, உணவளித்து, உடுத்துவித்து, தாபரிக்கும் இடம் தந்து, எல்லா செவுகளுக்கும் பணமும் அவர்களுக்கு கொடுத்திருக்கும் வரை ஊழியம் செய்வார்கள்!*

ஆனால், ஒருநாள் தங்களுடைய தேவைகளில் யாதொன்றும் வராதிருந்தால், அதைத் தங்கள் ஜெபத்தில் குறிப்பிட்டு கேட்பார்கள்! தொடர்ந்து வரவில்லையென்றால், அவர்கள் உடனே குறைகூறி! முறுமுறுத்து! அவருக்கு ஊழியம் செய்வதை நிறுத்தி விடுவார்கள்! இதுபோன்றவர்கள், சில உரிமைகள் தங்களுக்குரியது என பற்றிக் கொண்டு ஊழியம் செய்வார்கள். அவர்கள் கூறும்போது "ஆண்டவரே இதை நான் உமக்காக செய்தேன். ஆகவே, இதற்காக நீர் எனக்கு 'இதைச்' செய்யவேண்டும்!" என கேட்பார்கள்.

ஆனால் "**தேவனுடைய அடிமையோ" தன் உரிமைகள் அனைத்தையும் விட்டு விட்டவன்!** தேவன் அவனுக்கு உணவும், பாதுகாப்பும், பணமும் கொடுத்தால், அவன் மகிழ்ச்சியாயிருப்பான்! அதே வேளையில், தேவன் அவனுக்கு ஒன்றும் தராவிட்டாலும், அவன் தொடர்ந்து மகிழ்ச்சியாயிருப்பான். அவன் இன்னமும் ஒரு அடிமையாயிருப்பதை எண்ணி, மகிழ்ச்சியுடன் தொடர்ந்து பணி செய்வான். அந்த நாட்களிலிருந்த அடிமைகளிடம் காணப்பட்ட ஒரே வித்தியாசம் என்னவென்றால், அந்த அடிமைகள் தங்கள் எஜமான்களுக்குப் பயந்து, வலுக்கட்டாயமாய் வேலைகள் செய்யவேண்டும். ஆனால் கிறிஸ்துவின் அடிமைகளோ, எஜமானாகிய தங்கள் தேவனுக்கு 'அன்பின் மிகுதியில்' ஊழியம் செய்வார்கள்! அவர்களோ யாத்திராகமம் 21:5ம் வசனத்தில் காண்கிறபடி "நான் என் எஜமானனை நேசிக்கிறேன்! ஆகவே, நான் அடிமை ஸ்தானத்திலிருந்து விடுதலை பெறப்போவதில்லை!" என்றே கூறுவான்.

> வெளிப்படுத்தின விசேஷப் புத்தகம் குறிப்பிடும் 'வெளிப்பாடு' உங்களுக்கும் வேண்டுமென்றால், அதற்குள்ள ஒரே தகுதி: நீங்கள் 'தேவனுக்கு அடிமை களாய்' இருக்கவேண்டும் என்பதேயாகும்.

அதாவது, உங்களை தேவனுக்கு முழுவதுமாய் ஒப்புக்கொடுத்து, அவரிடமிருந்து யாதொன்றும் நீங்கள் எதிர்பார்த்திடக்கூடாது! இவ்வாறு, அவருக்கே முற்றிலும் சொந்தமாய் நீங்கள் மாறிவிட்டால், தேவன் செய்கிற எதைக் குறித்தும் அல்லது அவர் உங்களுக்கு செய்யாத எதைக் குறித்தும் அல்லது அவர் எனக்கு இதை செய்திருக்கவேண்டும் என்பதைக் குறித்தும் "யாதொரு குறை சொல்லும் இல்லாமல்" உங்கள் மனநிலையோ: "ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேன்! நான் உம்முடைய அடிமை! உம்மைத்தவிர, வேறு எதற்காகவும் நான் வாழ விரும்பவில்லை! உமக்கு நான் ஊழியம் செய்வது, பணத்திற்காகவோ அல்லது நீர் எனக்கு இந்த பூமியிலோ அல்லது பரலோகத்திலோ தரப்போகும் யாதொரு 'பிரதிபலனை' எதிர்பார்த்தோ நான் உமக்கு

*ஊழியம் செய்யவில்லை'' என்பதாகவே இருக்கவேண்டும்!*

*நீங்கள் சேவிக்கும் தேவனைக்குறித்து இதுதான் உங்கள் மனநிலையாய் இருந்தால்,* **வெளி.1:1-ல் கூறப்பட்ட 'வெளிப்பாடு' உங்களுக்கும் அருளப்படும்!** *அவ்வாறு இல்லாவிட்டால், உங்கள் புத்திசாலியான மூளையை பயன்படுத்தி உங்கள் ஜீவகாலமெல்லாம் வேதத்தைப் படித்துப் பார்த்தாலும், இந்த புத்தகத்தில் கூறப்படும் பல்வேறு நிகழ்ச்சிகளையும், உவமைகளையும் வைத்து, கவர்ச்சிகர மான பல்வேறு விளக்கங்களை நீங்கள் பெற்றுக் கொண்டும்.... அவை அனைத்தும், முற்றிலும் தவறாய் போய்விட முடியும்! 'வெளிப்பாடு' ஏதும் இல்லாமலே நீங்கள் வெளிப்படுத்தின விசேஷப் புத்தகங் களையும் வாசித்திட முடியும். ஆனால், அது உங்களுக்கு சத்தியமாய் இராது! ஆகவே உங்கள் ஜீவியத்தில் ஒரு சிறு மாற்றமும் ஏற்படாது. நீங்களோ 'உலகத்திலுள்ள வஞ்சகத்தில்' சஞ்சரித்து ஜீவிப்பீர்கள். ஆகவே, வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தின் முதல் வசனத்தை ஒருபோதும் புறக்கணித்து விடாதீர்கள்! மேலும், இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுத்தலான* **அனைத்து வெளிப்பாடுகளையும், தேவன் தம்முடைய அடிமைகளுக்கு மாத்திரமே தருகிறார்** *என்பதை உங்கள் ஞாபகத்தில் எப்போதும் வைத்திருங்கள். யோவான் ஓர் அடிமையாய் இருந்த படியால், வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தின் வெளிப்பாடுகளை நன்கு விளங்கிக் கொண்டார். இன்றும் அவ்வாறே, கிறிஸ்துவின் அடிமைகளாய் இருக்கும் யாவரும் விளங்கிக் கொள்வார்கள்!*

இயேசுவின் தாழ்மையிலிருக்கும் அடுத்த பகுதியை வெளி.1:9-ம் வசனத்தில் காண்கிறோம். யோவான் தன்னை **'உங்கள் சகோதரன்'** என்றே குறிப்பிடுகிறார். தன்னை அவர், போப் யோவான் அல்லது பிஷப் யோவான் அல்லது ரெவரெண்ட் யோவான் அல்லது பாஸ்டர் யோவான் என்று கூட கூறவில்லை. அவருடைய 95-வது வயதிலும், ஒரு சாதாரணமான யோவான் சகோதரனாகவே இருந்தார்!

*கிறிஸ்துவுக்குள் மற்ற சகோதரர்களைப் போலவே, அவரும் ஒரு எளிய சாதாரண சகோதரன்! இது, கிறிஸ்தவ தலைவர்களாயிருக்கும் அனைவருமே பின்பற்றவேண்டிய ஓர் நல்ல மாதிரி! ஆனால், இன்றுள்ள 98% சபை தலைவர்கள், யோவான் காண்பித்த இந்த நல்ல மாதிரியைப் பின்பற்ற மாட்டார்கள்! அது ஏனென்றால், அவர்கள் தங்களைக் குறித்து வைத்திருக்கிற உயர்ந்த சிந்தைகளேயாகும்! இவ்வாறு, அவர்கள் தங்களை மற்ற விசுவாசிகளைக் காட்டிலும் உயர்த்த விரும்புகிறபடியால், தங்கள் பட்டங்களை தங்களோடு வைத்துக் கொள்ளவே விரும்புகிறார்கள்! தங்கள் பட்டங்களை*

*அவ்வளவு அதிகமாய் நேசிக்கிறார்கள்! இயேசு தன்னுடைய சீஷர்களுக்கு கூறும்போது, அவர்கள் அனைவரும் சகோதரர்களும் ஊழியக்காரர்களுமாய் இருக்கிறார்கள் என கூறி, அவர்கள் தங்களுக்கென யாதொரு பட்டங்களையும் சூட்டிக் கொள்ளக் கூடாது! என அவர்களுக்கு கட்டளையிட்டார் (மத்தேயு **23:8-11**). இந்த வசனங்களில் காணப்படும் ஆண்டவரின் கட்டளைக்கும், வெளிப் படுத்தின விசேஷத்தில் காணும் **1:1**-ம் வசனத்தின் திருஷ்டாந் தத்திற்கும், இன்று எண்ணற்ற கிறிஸ்தவர்கள் கைக்கொண்டு வாழா திருப்பது துயரம்!*

*– சகரியா பூணன்*

---

## மாமியார் கொண்ட 'காய்மாரம்' அரண்மனைவிட்டு துரத்தியது!

*__எ__ன்னுடைய மாமியார் 'சில காரியங்களுக்காக' அவர்களுடைய உறவினர்கள் இருக்கும் பட்டணத்து தெருவிற்கு நான் போய்வரும்படி அனுப்பிவிட்டார்கள். நான் ஏற்கெனவே சென்றிருந்த என் மாமியாரின் இருப்பிடத்திற்குச் சென்றபோது, ஓர் அதிர்ச்சியான மாற்றம் இருந்ததைக் கண்டேன். சில வருடங்களுக்கு முன்பு நான் இந்த இடத்திற்கு வந்தபோது, என் மாமியாரின் உறவினர்கள் ராஜபோகமாய் என்னை வரவேற்று, உறவினர்கள் பலர் தங்கள் வீட்டிற்கு வரும்படி அன்புடன் கட்டாயப்படுத்தி கூப்பிடுவார்கள்! ஆனால் இப்போதோ, வெறுப்புடன் என்னோடு பேசியபோது அதிர்ச்சி அடைந்தேன். என் மாமியார் உறவினர்களில் ஒருவர் இதைக் குறித்து குறிப்பிட்டபோது "எங்கள் நெருங்கிய உறவினரான* **உன் மாமியாருக்கு நீ செய்த தீமைக்கு** *எதிர்செயலாகவே இவ்வாறு உனக்கு நடக்கிறது" என கூறினார்கள்! அவர்கள் கூறியது என் உள்ளத்திற்கு இன்னமும் வேதனையாக இருந்தது. ஏனெனில், என் மனதார நான் எந்த தீங்கும் அவர்களுக்கு செய்ததில்லை!*

*நான் வீடு திரும்பியதும், எப்போதும்போலவே என் மாமியாரை மதித்து அவர்களைப் பிரியப்படுத்துவதற்குரிய அனைத்தையும் செய்தேன்.* **நான் முன்வந்து செய்த அனைத்து நன்மைகளையும் 'அன்பின் சிறந்த விடையாக' அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை.** *ஒரு சமயம், அவர்களோடு அமர்ந்து 'என் பட்சத்தில் ஏதாவது உங்களிடம் பிழை உண்டோ?' எனவும் பணிவோடு கேட்டேன். அதற்கு அவர்கள் ஒரு பதிலும் சொல்லவில்லை. இச்சமயத்தில், நான் அவர்களுடைய ஊருக்குச் சென்று கேள்விப்பட்ட "நீ உன் மாமியாரை தீமையாய் நடத்தினாய்!" என்ற பகுதியை எடுத்துரைத்து, அன்பிற்கும்*

ஐக்கியத்திற்கும் ஏற்பட்டிருக்கும் தடையைப் போக்குவதற்கு முயற்சித்துக் கேட்டேன். நான் மீண்டும் அவர்களிடம் கூறும்போது "நான் அறிந்தவரை, உங்களை எப்படியெல்லாம் கனம் செய்ய வேண்டும், மேலான இடத்தில் வைத்திருக்க வேண்டும், என்றெல்லாம் மிகுந்த கருத்தோடு உங்களிடம் பழகி வந்திருக்கிறேன்! ஆனால், நான் உங்களுக்கு தீங்கு செய்ததாக கூறப்பட்ட பகுதி உண்மைதானோ? என தயவுடன் உங்களிடம் விளக்கம் கேட்கிறேன்" என அவர்களிடம் கேட்டேன்!

மேலும் அவர்களிடம் "நான் உங்களைத் தீமையாய் நடத்தினேன் என நீங்கள் ஊர்ஜிதமாய் கூறினால், உங்களுக்குத் தீமை தரும்படி இந்த அரண்மனையில் இருக்காமல், உங்களைவிட்டு விலகி இருப்பதற்கும் சம்மதிக்கிறேன்!" என மனம் உடைந்து கூறினேன். இவ்வாறு நான் பேசியபோது மிகுந்த மரியாதையோடும், தெய்வ பயத்தோடுமே கூறினேன்.

ஆனால் என் மாமியாரோ, சிறிதுகூட அன்பைக்காட்டாமல் "நான் என்ன செய்ய வேண்டுமோ அதை சரியாய் செய்கிறேன்! நான் உன்னை வெளியே போகும்படி கூறவே இல்லை! நீயாகவே என்னைவிட்டு பிரிந்து போக முடிவு செய்து விட்டாய்!" என கூறிவிட்டார். "நீ என்னோடு தங்கி இருக்கலாம்!" என அவர் கூறாமல், நான் அரண்மனைவிட்டு வெளியே செல்வதற்கு வழியை திறந்து விட்டார்கள்.

நான் வெளியே போவதற்குரிய காரியங்களை ஆயத்தம் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டேன். நானோ, விதவையான நாள் தொடங்கி வெளியே எங்கும் செல்லவில்லை. அவசியமான 'ஏழைகளுக்கு உதவும்' இடங்களுக்கு மாத்திரமே சென்று வந்தேன். என் மாமியார் என்னை அழைத்துக்கொண்டு செல்ல வேண்டிய இடங்களுக்கு என்னை அழைத்துச் செல்லாமல், ஒதுக்கியே வைத்திருந்தார்கள்.

இவ்வித என்னுடைய எல்லா வேதனையான அனுபவங்களிலும் "நான் தேவனோடு கொண்ட அந்தரங்க உறவில்" சேதம் வந்து விடக் கூடாது என்பதில் ஆண்டவர் என்மீது அக்கறை கொண்டிருந்தார். இந்த உலகில் யாதொன்றும் 'இயற்கையின் பசுமையை கொன்றுவிட இயலாது!' இயற்கை தன் பசுமையை காத்துக்கொள்ள, யாதொரு ஆறுதலையும், ஆதரவையும் தேடுவதில்லை! இவ்வாறு தேவன் விரும்பியபடியே நான் திருப்தி கொண்டேன்.

என்னுடைய பிள்ளைகளோடும், என் மகளின் செவிலித் தாயோடும் வெளியே செல்வதற்கு, மழைகாலத்தின் நடுவில் செல்வதே சரியாய் இருக்கும் என்று முடிவு செய்தேன். நகரத்தின் பல இடங்களில் நான் வீடு தேடியும் வீடு கிடைக்கவில்லை. அச்சமயத்தில், ஆலயத்தின்

*உபகாரி அம்மாள், அவர் வசித்த அப்பார்ட்மெண்ட் கட்டிடத்தில் ஒரு நல்ல வீடு இருப்பதாக என்னை அழைத்தார்கள். இச்சமயத்தில் என் மனதில் ஒரு போராட்டம் எழுந்தது. அது என்னவென்றால், நான்* **சிலுவையை புறக்கணித்து விட்டு வெளியே செல்கிறேனோ?** *என்ற எண்ணமும் "நான் அரண்மனையில் இருப்பது என் மாமியாருக்கு பிடிக்கவில்லையென்றால், அவர்களோடு* **அரண்மனையில் தொடர்ந்து வாழ்வது நியாயமோ?**" *என்ற இருவிதமான எண்ணங்கள் என் மனதை வாட்டியது. ஆகிலும் நான் அரண்மனையை விட்டு வெளியேறிச் செல்ல வேண்டிய நாள் மட்டும், என் மாமியார் என்மீது பகை கொண்டவர்களாகவே இருந்தார்கள்! நான் புறப்பட்டுச் சென்ற அந்த நாளில் "அவளுடைய சந்தோஷத்திற்காக, வீட்டை விட்டுப் போகிறாள்!" என ஆத்திரமாய் பேசிவிட்டார்கள்.*

*நான் பட்டணத்திற்குள் சென்று, அப்பார்ட்மெண்ட் வீட்டில் சேர்ந்தவுடன் சில நாட்கள் கழித்து நான் தங்கியுள்ள வாடகை வீட்டிற்கு என் மாமியார் வரும்படி அன்புடன் அழைத்தேன். ஆனால் அவர்களோ, என் அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை.*

*நான் அவர்களிடம் "நான் உங்களை அலைக்கழிக்கும்படி வரச்சொல்லாமல் அன்போடுதான் அழைத்தேன்!" என கூறினேன். அதற்கு அவர்கள் கோபமாக "உன் சாக்குபோக்கு எனக்குத் தேவை இல்லை! நான் உன்னை ஒருபோதும், போகச் சொல்லவில்லை.* **என்னை விட்டு பிரிந்து போகவே நீ ஆசைப்பட்டாய்!**" *என்றெல்லாம் கூறி முற்றுப்புள்ளி வைத்து விட்டார்கள். இப்போது, நானே நகரத்திலுள்ள என் இருப்பிடத்தை விட்டு, என் மாமியார் அரண்மனைக்குச் சென்றேன்! அவர்களோ, என்னோடு பேச மறுத்ததும் அல்லாமல், என்னைப் பார்க்கக்கூட விரும்பவில்லை. நான் வருத்தத்துடன் வீடு திரும்பினேன். மீண்டுமாய், என்னுடைய வாடகை வீட்டிலிருந்து, எனக்குச் சொந்தமான கோச் - வண்டியை அனுப்பி, அவர்களை அன்புடன் வரவழைத்து வேண்டினேன். அவர்களோ, என் கோச் வண்டியை வெறுமையாய் அனுப்பி விட்டார்கள்!*

*என் திறந்த உள்ளத்தை, நான் பல்வேறு வகையில் வெளிப்படுத்திய பின்பும், என் மாமியாரின் மனம் உணராததைக் கண்டு வருந்தினேன்! பொதுவான ரீதியில், அவர்கள் நல்லவர்கள்தான்! ஆகிலும் நன்மை பல கருதி தேவன் இவ்வாறு அனுமதித்தார் என அறிந்தேன்! அதேசமயம் 'நானும்' என் பட்சத்தில் என் மாமியார் தொடர்பாக, குறை ஏதும் உண்டோ? என என்னை தேவனுக்கு முன்பாக என்னை நிறுத்திப் பார்க்கவும், நான் தவறவில்லை!*

*– மேடம் குயான்*

## ஆவியின் வரங்களை புறக்கணித்து, பாஸ்டரேட் தேர்தல் துயரம்!

**பு**திய ஏற்பாடு வழங்கும் மிகப்பெரிய ஆசீர்வாதம், சபை ஊழியங்கள் "**ஆவியின் வரங்களினால்**" ஆட்கொள்ளப்பட வேண்டும் என்பதுதான். ஆனால், காலங்கள் கடந்து செல்லச் செல்ல, 'இந்த பொக்கிஷம்' சபை ஊழியங்களில் மங்கிக்கொண்டே போகிறது.

ஆவியின் வரங்களைக் குறித்த மனப்பான்மையில், கடந்த சுமார் 2000 வருடங்களில் மூன்று வேறுபாடான குழுக்கள் உருவாகி விட்டார்கள்: 1) ஆவியின் வரங்களை உயர்வாய் பேசி, அதை கொஞ்சம் பெற்றவுடன், ஜீவியத்தில் பின்மாறிய குழுவினர்கள்! 2)சபையின் இக்காலத்திற்கு 'ஆவியின் வரங்கள்' அவசியமில்லை என மறுக்கும் குழுவினர்கள்! 3) மேற்கண்ட இரு குழுவினரையும் பார்த்து, சலிப்புற்று, ஆவியின் வரங்களை விட்டு தூரநிற்பவர்கள். இவ்வித மூன்று குழுக்கள் இருப்பினும், இந்த கடைசி நாட்களில் ஓர் சிறந்த மற்றொரு குழுவையும் தேவன் எழுப்பியுள்ளார்.

இவர்களே, 'ஆவியின் வரங்களைக் குறித்த' சத்தியங்களை முழுவதுமாய் அறிந்து, புதிய ஏற்பாட்டின் விசுவாச உறுதியோடு, தேவன் தங்களுக்குத் தந்தருளிய ஆவியின் வரங்களை முழுவதுமாய் அனுபவிக்கும்படி வாஞ்சையோடு நாடும் உத்தம குழுவினர்!

1கொரிந்தியர்12ம் அதிகாரத்தில் பவுல் வரிசைப்படுத்திய ஒன்பது வரங்களை வாசித்தவுடன், ஆவியின் வரங்கள் ஒன்பது என்றே ஜனங்கள் முற்றுப்புள்ளி வைக்கிறார்கள். ஆனால் உண்மையில் 1கொரி.12:4-11, 27-31; ரோமர் 12:3-8; எபே.4:7-11 ஆகிய வசனங்களை தொகையிட்டால் இங்கு பவுல், **சுமார் 17 வரங்களுக்கு மேல்** குறிப்பிட்டிருக்கிறார். நாம் கவனித்துப் பார்க்க வேண்டியது என்னவென்றால், இவ்வித **ஊழிய தாலந்துங்கள் இயற்கையான திறமைகள் அல்ல! அது, அந்த விசுவாசியின் உத்தமத்தை ஆதாரமாய் வைத்து, பரிசுத்தாவியானவர் அவனுக்கு வழங்கும் வரங்களாகும்.** இவர்களையே, கிறிஸ்துவின் சரீரத்தில் ஓர் பங்காக பரிசுத்தாவி யானவர் ஏற்படுத்தியுள்ளார்.

ஆனால், காலங்கள் கடந்து செல்லச் செல்ல சுவிசேஷ போதகர்களிடம் 'ஆதிநிலை மங்கத் துவங்கிவிட்டது'. இவர்கள் ஜனங்களை திசை திருப்பி, அப்போஸ்தலர்கள் மரித்தவுடன், புதிய ஏற்பாடு ஸ்தாபிக்கப்பட்டவுடன் "ஆவியின் வரங்களின் காலம் முடிவடைந்து விட்டது" என தவறாய் உபதேசிக்கத் தொடங்கி

விட்டார்கள்! இதுபோன்ற போதகத்தால் ஏற்பட்ட தீய விளைவு என்ன தெரியுமா? "ஆவிக்குரிய வரங்கள் கொண்ட உத்தம தாசர்கள்" சபையில் குறைவடைந்து போனார்கள்! என்பதுதான். ஆனால், நம் காலத்தில் காணப்படும் அபாயகரமான ஆவிக்குரிய நிலையில் "தீர்க்கதரிசன சுடரொளி கொண்ட" வரம் பெற்றவர்கள், எவ்வளவாய் தேவைப்படுகிறார்கள்! நீங்கள் கேட்கலாம், "அப்படியானால், இன்று ஆவியின் வரங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதா? அதை எப்படி அறிய முடியும்?" இன்றுள்ள கிறிஸ்தவ சபைகளை சற்று ஏறிட்டுப் பாருங்கள்...

**ஆவியின் வரங்கள் பெற்ற தாசர்களுக்குப் பதிலாக, கிட்டதட்ட எல்லா சபைகளிலும், அவர்களின் பட்டம், பதவி, பணம் அடிப்படையில் தேர்தல் நடத்தப்படுகிறது!**

'மானிட அறிவு வரம் கொண்ட' திறமைசாலிகள் குழுக்களாய் கூடி விவாதித்து, அரசியல் போன்று சபை நடத்தும் கொடுமை வெகுவாய் தலைவிரித்தாடுகிறது. இருப்பினும், தேவன் உண்மையுள்ளவர்! இந்த கொடிய நாட்களிலும் ஆவியின் வரங்களை நாடும் தாசர்களை எழுப்பி, இந்த பூமியில் புதிய ஏற்பாட்டின் ஊழியத்தை மாசுபடாமல் நிரூபித்து வெற்றி சிறப்பார்!

– *A.W. டோசர்*

---

## நீங்கள் தேவ குடும்பத்திற்கு அந்நியரோ?

**ஒ**ரு கிறிஸ்தவ சபையிலிருந்த ஒரு சகோதரன், என்னிடத்தில் வந்து "பொதுவான நற்குணங்களை மனுஷன் பெற்றிருக்கும்போது, சின்னச்சின்ன தவறுகளையும், பாவங்களையும் ஒரு பொருட்டாய் எண்ணாமல் இருக்கலாமே! அப்படியிருக்க, நீங்களோ, எல்லா பாவமும் அபாயம் கொண்டது எனவும், அது நம் ஆத்துமாவையே அழித்துவிடும்! எனவும் கூறுகிறீர்களே, இது நியாயமா?" என கேட்டார். நான் அவருக்கு கூறிய பதிலையே, இங்கு நான் குறிப்பிடுகிறேன்.

நாம் மரித்துப்போவதற்கு முன்பாக, நம் சரீரத்திலுள்ள ஒவ்வொரு உறுப்புகளும் செயலற்றுப்போனால்தான் மரணம் ஏற்படும் என்பது இல்லை! உங்கள் இருதயமோ அல்லது மூளையோ அல்லது உங்கள் சிறுநீரகமோ போன்ற **ஏதாகிலும் ஒரு உறுப்பு செயலற்றுப்போனாலும், மற்ற உறுப்புகள் அனைத்தும் நல்ல ஆரோக்கியமாய் இருந்தபோதிலும் உங்கள் உயிர் போய்விடும்!** அதுபோலவே, **ஒரு பாவத்தின் விஷத்தன்மை** உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தை அழித்துவிட முடியும்! அது உங்களின் நித்திய ஆத்துமாவை அழித்திட முடியும்! அது, உங்கள் முழு குடும்பத்தைக்

கூட அழித்திட முடியும்! அது, உங்களைச் சார்ந்த சபையை அழித்திட முடியும்! அது, முழு மானிடவர்க்கத்தைக்கூட அழித்திட முடியும்! ஆதாமின் பாவத்தில், இத்தனை அழிவும் சேர்ந்திருந்தது. அழிவைக் குறித்தே பேசுவதாக நீங்கள் எண்ணுவதற்குப் பதிலாய், திரும்பவும் ஜீவன் பெற வழி உண்டென்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். எஜமானனாகிய இயேசு ஒரே ஒரு வார்த்தை சொன்னவுடன் "**மரித்தவன் ஜீவன் பெற்று**" **எழுந்தான்!** ஆவிக்குரிய ஜீவியத்தை இழந்தவன் எவனும், எஜமானிடத்தில் மனந்திரும்பி வந்து, தான் இழந்ததை மீண்டும் பெற்று கொள்ள முடியும்!

மனுஷனுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட சிங்கம், புலி போன்ற கொடிய மிருகமோ அல்லது ஆகாயத்துப் பட்சிகளோ, மீண்டும் தங்கள் சொந்த வன வாசஸ்தலத்திற்கு திரும்பி வந்தால், அவைகளின் சொந்த மிருகவர்க்கமோ அல்லது பறவை வர்க்கமோ, அவைகளைத் தங்களோடு சேர்த்துக்கொள்ளாது! மனுஷனுடைய நீண்ட கால பழக்க வழக்கத்திற்குள் சென்ற 'இவைகளின் சுபாவங்கள் வெகுவாய் மாறி இருக்கும்' என்பதை இந்த மிருகங்களும் பறவைகளும் புரிந்து கொள்கின்றன. அதுபோலவே, பரிசுத்தம் நிறைந்த ஆவிக்குரிய உலகமும் இருக்கிறது!

> **தீமையோடு தங்களை ஒன்றரக் கலந்து, தங்கள் ஆவிக்குரிய திவ்விய சுபாவத்தை கறைப்படுத்திக்கொண்டவர்களை, ஆவிக்குரிய உலகம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது! இதுபோன்ற ஜனங்கள், ஆவிக்குரிய உலகத்தில் பிரவேசித்திட முயற்சித்தால், அவர்கள் அந்நியர்களாய் இருக்கிறபடியால், அங்கு அவர்களுக்கு 'தன் வீட்டில்' இருப்பதைப்போன்ற எண்ணம் ஏற்படாது!**

இந்த உலகத்தில்கூட, பாவத்தில் வாழ விரும்பும் ஜனங்கள், பரிசுத்த ஆவிக்குரிய ஜனங்களின் ஐக்கியத்தை அலட்சியப்படுத்தி புறக்கணிப்பதை நீங்களே கண்டிருப்பீர்கள். அப்படியிருக்க, ஆவியின் நித்திய உலகத்தில், இவர்கள் எப்படி சந்தோஷமாய் வாழ்ந்திட முடியும்? ஆச்சரியமான பரலோக பேரின்பம், இவர்களுக்கு நரகம் போல் தோன்றும்!

இந்த உலகத்தில், ஒரு அரசனுக்கோ அல்லது ஒரு தேசத்திற்கோ துரோகம் செய்யும் ஒரு துரோகி, அடுத்த நாட்டிற்கு ஓடிச்சென்று ஒரு அகதிபோல் அபயம் பெற்று வாழ்ந்திட முடியும். ஆனால் தேவனுக்கும் அவரது சபைக்கும் துரோகம் செய்யும் ஒருவன், எங்குபோய் அபயம் பெற்றிட முடியும்? அதுபோன்ற நிலைகொண்ட ஒருவன், ஒரு அகதியைப்போல அபயம் தேட எங்குச் சென்றாலும், ஆவிக்குரிய உலகத்திற்கு அவன் தீங்கு செய்துவிட்டு போகிறபடியால்

*அபயம் பெற்றிட இயலாது! அப்படியானால் அவனுக்கு அபயமே இல்லையா? உண்டு! தன் முன் நிற்கும்* **தேவனிடம் மனந்திரும்பி,** *மன்னிப்பு கேட்டு, ''ஓ, தேவனே என் துன்மார்க்கத்திலிருந்து விடுவியும்!'' என உணர்ந்து திருந்தி வந்தால் மாத்திரமே, தேவன் அவனுக்கு அபயம் தந்து, அவன் பாவங்களை மன்னித்து ஏற்றுக் கொள்வார்!*

*உடனே நீங்கள், ''தேவனிடத்தில் இப்படிதான் கெஞ்சி அவரிடத்தில் இரக்கம் கேட்க வேண்டுமா? அப்படி இல்லையென்றால், எங்கள் பாவங்களினிமித்தம் எங்களை தண்டித்து நரகத்தில் அனுப்பி விடுவாரா? இதுதான் தெய்வ அன்பா?'' என நீங்கள் கேட்கலாம்.*

**நான் உங்களுக்குச் சொல்வதெல்லாம் 'தெய்வ அன்பை முன்வைத்து' உங்கள் சீர்கேடான வாழ்க்கையை மறைத்து கொள்ளாதிருங்கள்!**

*இப்போது நான் கூற விரும்பும் சத்தியத்தை கேளுங்கள்: பாவிகளை, தேவன் நரகத்திற்குள் தள்ளுவார் என்று ஒருபோதும் எண்ணாதீர்கள்! தேவன் அன்பாகவே இருக்கிறார்! ஒருவராகிலும் ஆவிக்குரிய நரக அக்கினியில் வீழ்ந்து தவிப்பதை அவர் விரும்புவதே இல்லை. உண்மை என்னவென்றால், நம் சொந்த பாவ கறைகளும் கேடான ஜீவியமுமே நம்முடைய 'ஆவிக்குரிய நிறைவான சந்தோஷத்தை' கெடுத்துப்போடுகிறது. இந்த உலகத்தில் வாழும் உயிர் முடிந்து போவதற்கு முன்பாகவே, ஒருவன் பரலோகத்தையோ அல்லது நரகத்தையோ தன் ஆத்துமாவுக்கு தெரிந்து கொள்ளும் நிலையில் இருக்கிறான்! 'பாவத்தை' ஏதோ மாயமான, நிஜமற்றது என எண்ணாதீர்கள். அது, மெய்யாகவே ஆவிக்குரிய அந்தஸ்திற்கு உட்பட்டது! ஒரு மானிடன், திவ்விய நற்குணத்தை விட்டு விலகி, தன்னைப் பிரித்து வைத்துக்கொண்டு, தன் ஆத்துமாவிற்குள் தன் சொந்த அழிவிற்கு வழிவகுக்கும் விதைகளை 'அவனே தூவிக் கொள்ள' முடியும்!*

*ஒருவரையாகிலும் தேவன் நரகத்திற்கு அனுப்ப விரும்புவ தில்லை! பாவிகளாய் வாழும் மனுஷர்களே, தங்களை நரகத்தின் ஆக்கினைக்குள்ளாக வைத்துக்கொள்கிறார்கள். அதாவது, நமக்கு நாமே அழிவின் ஆக்கினையை தேடிக்கொள்கிறோம்!*

**இன்று அநேகருடைய இருதயங்களின் நிலைமை என்னவென்றால், 'சொந்த வீட்டில் இருப்பதைப்போன்ற உணர்வை' நரகத்தில்தான் பெற்றுக் கொள்கி றார்கள்! தங்கள் பரிசுத்த எஜமானனாகிய தேவனின் பரலோகம், அவர்கள் சொந்த வீட்டில் வாசம் செய்யும் உணர்வைத் தர முடிவதில்லை!**

*தேவனோ, ஒவ்வொருவரையும் தன்னுடைய இராஜ்ஜியத்திற்குள் அனுமதிக்கவே விரும்புகிறார். அதற்காகவே அன்பின் அழைப்பும்*

*நமக்குத் தந்துள்ளார். ஆனால், ஒரு பாவ துன்மார்க்க ஜீவியத்தை நாம் தெரிந்துகொண்டால்,* **பரலோகம் நாம் தங்கும் இனிய வாசஸ்தலமாயிராமல்....** *அந்த பரலோகம்கூட, தொல்லை நிறைந்த இடமாய் மாறி விடும்!*

*வியாதி என்பது, நீங்களாகவே எண்ணிக்கொண்ட கற்பனை அல்ல! அது நிஜமாகவே உண்மை!* **'சின்ன அம்மை' (Smallpox)** *வந்து விட்டால், மனுஷனுடைய தோலின் அழகை, குறைந்த நாட்களுக்குள் அழித்து, தோற்றத்தை அருவருப்பாக மாற்றிவிட முடியும். இதைவிட, 'ஆவிக்குரிய ஆக்கினை' மகா உண்மையானது! இந்த ஆக்கினையின் அழிவிற்கு தப்ப விரும்பும் யாராயிருந்தாலும், அவர்கள், தங்களை சிருஷ்டித்த எஜமானனிடத்தில் மனம் திரும்பி வரவேண்டும்! அவர் ஒருவரே, நம் பாவத்திலிருந்து விடுதலையும், அதன் கொடிய விளைவுகளுக்கு விடுதலையும் தரமுடியும்! அப்போது, அவருடைய பிரசன்னம் நம்முடைய இருதயத்தை ஆண்டுகொண்டு, நரக ஆக்கினையிலிருந்து நம்மை விடுதலையாக்கி, நம்மை நித்திய மகிழ்ச்சிக்குள் நடத்த முடியும். இவர்களே தேவனுக்குப் பிரியமான, அவருடைய குடும்பத்தின் ஆவிக்குரிய பிள்ளைகள்!*

*– சாது சுந்தர்சிங்*

---

**தாழ்மையில் சிகரமான, எனது ஆசான்கள்!**

*இந்து மார்க்கத்திலிருந்து என் தகப்பனாரோடு குடும்பமாய் இரட்சிக்கப்பட்டிருந்தோம். கிறிஸ்தவ ஆலயமோ, ஆராதனைகளோ அறியாத எங்களுக்கு, ஆராதனைகளுக்கு ஒழுங்காய்ப்போவதும், கீதங்களைப் பாடுவதும், ஜெபங்கள் செய்வதும், பிரசங்கங்களைக் கேட்பதும் உற்சாகமாயிருந்தது! போதகர்கள் செய்திடும் பிரசங்கங்கள் எப்பொழுதும் அருமையாயிருக்கும். அவர்களும் இந்துவாயிருந்து கிறிஸ்தவர்களானவர்கள்தான்!* **'கிறிஸ்துவின் கிருபை'** *என்ற தலைப்பின் பேரில், 2கொரிந்தியர் 8:9 -ம் வசனத்திலிருந்து ஒரு ஞாயிறு காலை ஆராதனையில் பிரங்கித்தார்கள். அதை சுமார் 13 வயதில் கேட்டேன். இப்போது 76 வருஷங்களாகியும் அந்தப் பிரசங்கத்தை நான் மறக்கவில்லை. போதகருடைய மூத்த மகள் திருமதி. பீட்டர் பரங்கிமலையில் வசித்தார்கள். நான் பிரசங்கிப்பதை அடிக்கடி கேட்டவர்கள்! ஒருநாள் அவர்கள் என்னைப் பார்த்து: "என் தகப்பனார் இப்பொழுது கூட்டத்தில் நீங்கள் பிரசங்கிப்பதைக் கேட்டால், பரமானந்தம் என்று நான் பெயரிட்டு ஞானஸ்நானம் கொடுத்த பையனல்லவா? என்று சொல்லி எவ்வளவோ*

*சந்தோஷப்படுவார்கள்"* என்றார்கள். *நானும் அதை ஆமோதித்து "கனம் போதகரய்யா மரிக்காமல் இன்றும் உயிருடன் இருந்திருந்தால்,* **அதே சந்தோஷம் இப்பொழுதும்** *அவர்களுக்கு இருந்திருக்கும் அம்மா!" என்றேன்.*

**தன்னை மனந்திரும்ப நடத்தியவர்களுக்கு, தனக்கு ஞானஸ்நானம் கொடுத்தவர்க்கு, சத்தியத்தில் நடத்தியவர்களுக்கு 'சந்தோஷம் தரும்' சாட்சி வாழ்க்கை வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் அனேகர் இருந்ததில்லை!**

*என் தகப்பனார் சாட்சியாபுரத்திற்குப் போய் அங்குள்ள பள்ளிக் கூடத்தில் வேலை பார்க்கும்படி உத்தரவாயிற்று. ஆகையால் நாங்கள் குடும்பத்தோடு சாட்சியாபுரம் போனோம். வாகைக்குளத்தில் நான் படித்ததுபோலவே சாட்சியாபுரத்திலும் போர்டிங்கில் சேர்ந்து படித்தேன். சாட்சியாபுரம் பள்ளிக்கூடத்தில் சிவகாசியைச் சேர்ந்த கனம் சுவிசேஷமுத்து என்பவர்கள், தலைமை உபாத்தியாயரா யிருந்தார்கள். ஜீவியத்தில் தேவபக்தி, ஒழுக்கம், அறிவு, கண்டிப்பு உள்ளவர்கள்! மாணாக்கர் அவர்களுக்குப் பயபக்தியாய் நடப்பார்கள்! ஒருநாள் காலை வகுப்பில் நான் என் உபாத்தியாயரிடம் உத்தரவு கேட்டு வெளியே போயிருந்தேன். நேரே வகுப்புக்குத் திரும்பாமல் ஒரு மரத்தின் அடியில் கற்களை பொறுக்கி விளையாடிக் கொண்டிருந்தேன். தலைமை உபாத்தியாயரவர்கள் அப்பக்கம் வந்து என்னைக் கண்டு கூப்பிட்டார்கள். நான் கிட்டப்போனபோது: "இதுவா உனக்கு விளையாடுகிற நேரம்" என்று சொல்லி, என் காதைப் பிடித்துக் கிள்ளி, உடனே வகுப்புக்குப் போ என்று அதட்டினார்கள். அவர்கள் அதை, அந்நிமிஷமே மறந்திருப்பார்கள். நானோ மறக்கவில்லை!*

**இன்றும், கண்டிதம் செய்து குணாதிசயத்தை திருத்தும் ஆவிக்குரிய சிறந்த போதகர்களை நாம் மறந்திடக் கூடாது. அவர்கள், நம் நன்மைக்கென்றே அனைத்தும் செய்கிறார்கள்!**

*நாங்கள் குடும்பமாக, சாட்சியாபுரத்தைவிட்டு நாசரேத்தூருக்குப் போய் சுமார் 15 வருஷங்கள் ஆன பின்பும், சாட்சியாபுரத்தைப் பற்றிப் பேசும்போது, அங்கே நடந்த கன்வென்ஷனைப் பற்றியும் இங்கே குறிப்பிடுவது நல்லது என்று எண்ணுகிறேன். கனம் உவாக்கர் போதகரும், எடி துரை ஐயா அவர்களும், கனம் அசரியா அவர்களும், நானுமாகச் சேர்ந்து கூட்டங்களை நடத்தினோம். வேத ஆராய்ச்சிக் கூட்டமும் நடந்தது. ரோமர் 6ம் அதிகாரம் முதல் 11 வசனங்களைப் படித்து தியானித்தோம்!* **பாவத்துக்கு மரித்தோம், இனிப் பாவம் செய்ய மாட்டோம் என்று அப்போஸ்தலன் சொல்லுகிறாரே, அப்படி நடக்க முடியுமா? என்றும், பாவமற்ற ஜீவியம் உண்டா?** *என்றும் கேட்டார்கள். தர்க்கம்*

அதிகமானபோது, கனம் உவாக்கர் போதகரவர்கள் என்னைப் பார்த்து: “நீங்கள் இதை விளக்கிக் காட்டுங்கள்” என்றார்கள். நான் எழுந்து பேசினபோது: இவ்வசனங்களில் ‘எண்ணிக்கொள்ளுங்கள்’ என்ற வார்த்தை பிரதானம்! கிறிஸ்து மெய்யாகவே மரித்து, மெய்யாகவே எழுந்தார். நாம் அவரைப்போல் மரிக்கவுமில்லை, அவரைப்போல் எழும்பவுமில்லை. ஆனால், அவர் தம்மைப் பாவிகளாகிய நம்மோடு ஒன்றாக்கி, நமது ஸ்தானத்தில் வந்து, நமக்காக மரித்து எழுந்தபடியால் நாமும் அவரோடு மரித்து எழுந்ததாக பிதா மதிக்கிறார்! நாம் இதை எண்ணிக்கொள்ளும் விசுவாச அளவுக்குத்தக்கபடி பாவத்துக்கு விலகி, கர்த்தருக்குப் பிரியமாக நடக்கமுடியும்! நாம் உண்மையாக மரித்து, உண்மையாக எழுந்ததுண்டானால், நாம் மரித்ததாகவும் எழுந்த தாகவும் ‘எண்ணிக்கொள்ள வேண்டிய’ அவசியம் இனி இராது! என்று சொன்னேன். எல்லாரும் மனதார ஏற்றுக் கொண்டார்கள்!

கூட்டத்தில் இருந்த, ஓய்வுபெற்ற கனம் சுவிசேஷமுத்து தலைமை உபாத்தியாயரவர்கள், அன்று மாலை நேரம் என்னிடம் வந்து: “நாம் இருவரும் அந்தச் சாலையைக் கடந்து, வாழைத் தோட்டத்தின் பக்கமாகப்போய் உட்கார்ந்து ஜெபம் செய்து திரும்புவோம் வாருங்கள்” என்றார்கள். என் பிரசங்கங்களைக் கேட்டு, என் பேரில் அவர்களுக்குப் பிரியம் இருந்ததை அறிந்தேன். வருஷங்கள் பல கடந்துபோனபோதிலும், மாணாக்கனாக அவர்கள்மீதுகொண்டிருந்த எனக்குள்ள மதிப்பு சற்றும் குறையவே இல்லை! “இதோ, வருகிறேன்” என்று சொல்லி, அவர்களோடு கூடப்போனேன். நானும் அவர்களும் தேவ காரியங்களைக் குறித்து வழிநெடுகப் பேசிக்கொண்டே போனோம். சாலையைக் கடந்து வாழைத்தோட்டம் வந்தவுடனே புல்தரையின் மேல் உட்கார்ந்து ஜெபித்தோம். அவர்கள் என்னைப் பார்த்து: **என்னை ஆசீர்வதியுங்கள்** என்றார்கள். நான் சற்று அதிர்ந்து போய் “நீங்கள் எவ்வளவோ பெரியவர்கள், உங்களை ஆசீர்வதிக்க நான் எம்மாத்திரம்” என்றேன். அதற்கு அவர் “அப்படியல்ல, **கர்த்தர் உங்களோடிருப்பதை** நான் அறிவேன், என்னை ஆசீர்வதியுங்கள்” என்றார்கள். மனத்தாழ்மையுடன், அவர்கள் விருப்பத்துக்கு இணங்கினேன். நாங்கள் இருவரும் கன்வென்ஷன் கூட்டத்திற்குத் திரும்பி நடந்து வந்தோம்.

நான் அவர்களைப் பார்த்து: “ஐயா, நான் உங்கள் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தபோது, வகுப்பு நேரத்தில் வெளியேபோய் ஒரு மரத்தடியில் கற்களைப்பொறுக்கி விளையாடிக் கொண்டிருந்தேன். நீங்கள் அந்நேரம் அந்தப் பக்கம் வந்து என்னைக் கூப்பிட்டு: இதுவா

விளையாடுகிற நேரம்? என்று சொல்லி என் காதைப் பிடித்துக் கிள்ளினீர்கள். இத்தனை வருஷங்களாகியும் அதை நான் மறக்க வில்லை! என்றேன். அவர்கள் சிரித்துக்கொண்டு: அது கொஞ்சமும் எனக்கு ஞாபகமில்லை என்றார்கள். அவர்கள் தேவபக்தியுள்ளவர்களா கையால், தான் வயதில் பெரியவர்களாயிருந்தும், என்னுடன் தாழ்மையாக நடந்து கொண்டார்கள். இவர்களைப்போலவே, கனம் என். தேவசகாயம் போதகர் அவர்கள் கல்வியிலும், வேத சாஸ்திர அறிவிலும் எவ்வளவோ சிறந்தவர்களாயிருந்தும் என்னோடு பழகின விஷயத்தில் எவ்வளவோ தாழ்மையாய் நடந்துகொண்டார்கள்!

**தாழ்மை இழிவான குணமல்ல. மனத்தாழ்மை கிறிஸ்துவின் சிந்தையா யிருக்கிறது (மத்தேயு 11:29).** தாழ்மையில் சிகரமான அவர்களை நான் ஆசானாகப் பெற்றது என் பாக்கியம்! என கருதி, கண்களில் கண்ணீர் கசிய கர்த்தரை ஸ்தோத்தரித்தேன்! ஒ கர்த்தாவே! நான் வளர்ச்சி அடையும் என் பருவத்தில், என் தாழ்மைமிக்க ஆசான்களைப் போலவே, நானும் 'கிறிஸ்துவின் உயர்ந்த தாழ்மை சிந்தை' கொண்டிருக்க எனக்கு உதவும்! என்றும் ஜெபம் செய்தேன்!

– பரமானந்தம் ஐயர்

---

## அர்ப்பண ஊழியத்தை 'அதே அர்ப்பணத்தில்' கர்த்தர் நடத்துவார்!

எங்கள் ஆசிரம ஊழியப்பணி, பல்வேறு இன்னல்களையும், உபத்திரவங்களையும் கடந்து முன்னேறி வளர்ந்து சென்றது. ஆகிலும், என்னோடு சேர்ந்து ஊழியம் செய்த ஆசிரமத்து சகோதரிகள் எனக்கு தோள் கொடுத்து **ஊழிய பாரத்தை சுமக்க தகுதியற்றவர்களைப்போல் கண்டேன்.** சுயநலம், தனக்கானதைத் தேடுதல், தன் வசதி, தன் இலாபம், தியாகம் செய்ய மறுக்கும் அவர்களின் சுகபோக விருப்பம் ஆகியவை கொண்டு வாழும் ஆசிரமத்து பெண்களைக் கண்டு 'என் உள்ளம் சலிப்புற்றது' சரிதான்! என்பதுபோல் எனக்குத் தோன்றியது.

ஆகிலும், இதைப்போன்ற தவிப்பிலிருந்த *மோசேயோ,* தன் ஜீவிய கால இறுதியில் 'தன் மேல் இருந்த அதே ஆவியை' அவருடைய பார்வையில் தெரிந்து கொண்ட ஜனங்கள் மீது வைப்பார் என்ற நல்ல பிரகாசமான எதிர் பார்ப்பைக் கொண்டிருந்தார். இப்போதும் அதுபோன்ற 'விசுவாச - எதிர்பார்ப்பு' எனக்கு தேவையாயிருந்ததை உணர்ந்தேன்!

திடமனதோடு, நான் முழங்கால்படியிட்டு, என் ஆண்டவரிடம் ஜெபித்தேன்: "என்னைப்போலவே முழு தியாகம் செய்து அர்ப்பணித்து ஊழியம் செய்வோர் அநேகர் இல்லையே! ஓ கர்த்தாவே, அன்று இதுபோன்ற ஏக்கத்தை மோசே பெற்றிருந்தார் என

*உம்முடைய வார்த்தை கூறுகிறதே! அவருடைய அந்த ஏக்கத்தின் படியே, தேவரீர் கிரியை செய்தீர். அவர் மேல் இருந்த ஆவியை (மோசேயினுடைய அர்ப்பணத்தைப்போலவே) மூப்பராகிய எழுபது பேர் மீது பகிர்ந்து கொடுத்து தீர்க்கதரிசனம் சொல்ல வைத்தீர்! அதை உம்முடைய தாசனாகிய மோசே "இவ்வாறு, கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள் மேல் இறங்கப்பண்ணியது மிகுந்த நலமானது என்றல்லவோ கூறினார்!" என் ஜெபித்தேன் (எண்.11:29).*

**இப்போதும் கர்த்தாவே 'என்னைப் போன்ற அர்ப்பணம் கொண்டவர்கள் இல்லையே' என்ற ஏக்கத்தை நீர் நிறைவேற்ற முடியுமென விசுவாசிக்கிறேன்.** *எங்கள் ஆசிரம பணியை நீர் அல்லவோ துவக்கினீர்! நீர் நிச்சயமாய் இந்த பணியை நிலைத்து நிற்கச் செய்வீர்! என்ற விசுவாசத்தில், தளர்ச்சி அடைந்த என்னை மன்னியும். இதுபோன்ற விசுவாச தளர்ச்சி, 'கல்வாரி அன்பின் சிகரத்தை' நான் இன்னமும் அடையவில்லை என்பதையே காட்டுகிறது! என்மீது கிருபையாயிரும்" என வேண்டி ஜெபித்தேன்.*

*– ஏமி கார்மைக்கேல்*

---

## 'ஒருவரையொருவர் ஆதாயம் செய்திடும்' பரலோக குடும்பம்!

*"இயேசுவைப்போலவே மாற வேண்டும்!" என்ற தீராத வாஞ்சை கொண்டவர்களே, அவர் பரிசுத்தராய் இருப்பதை ஒப்பிட்டு தங்களையும் சுத்திகரித்து வாழ்வார்கள்! (1யோவான்3:2,3). ஆகிலும், பேதுருவின் கால்களைக் கழுவ, இயேசு ஆயத்தமாயிருந்தபோது, அதை மறுத்த பேதுருவிடம்* "**நான் உன் கால்களைக் கழுவாவிட்டால், என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை!**" *என கூறியதைக் கேட்டு துடித்துப் போய், தன் கால்களைக் கழுவ வேண்டி நின்றான் (யோவான்13:8,9). நம்மை எவ்வளவுதான், தெய்வ பயத்துடன் சுத்திகரித்துக் கொண்டாலும், நம் கால்கள் இந்த உலகத்தின் தூசியில் நடந்து வருகிறபடியால்* "**நம் கண்கள் காணமுடியாத தூசிகளைக் கழுவ**" *நாள்தோறும், அவர் சமூகத்தைத் தேடி கழுவிக் கொண்டு வாழ்பவர்களே, இயேசுவின் மெய்யான சீஷர்கள்!*

*ஆகிலும், "ஓர் நித்திய சுதந்திரத்தை" இந்த வசனத்திற்குப் பின்னால் இயேசு மறைத்து வைத்துள்ளார். அதை "ஜீவ வசனத்தை உற்றுநோக்கும்" யாவரும் கண்டுகொள்ள முடியும்! இயேசு, யோவான்13:1 அதிகாரத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல்....*

> இந்த உலகத்திலிருந்து மீட்கப்பட்ட "தனக்கு சொந்தமானவர்களை" முடிவுவரை அன்புகூர்ந்து ஆதாயப்படுத்திக்கொள்ளவே, அவர்களின் 'அன்றாட' குறைகளை மனதார மன்னித்து, கழுவினார்!

*அவர்கள் கால்களை அவர் கழுவினபின்பு "நான் உங்களுக்குச் செய்ததை விளங்கிக்கொண்டீர்களா?" என கேட்டு, "நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்!" என கூறினார் (யோவான் 13:12,13). ஆ, இதுவே கிறிஸ்துவின் பழுதற்ற அவரது சரீரமான சபை.... இதுவே, பரலோக குடும்பம்!*

*"பிதாவே,* **நீர் எனக்குத் தந்தவர்கள்,** *உம்முடையவர்களா யிருக்கிறார்கள்" என இயேசு யோவான் 17:9-ல் கூறினார்.*

**நமக்குச் சொந்தமாய் தரப்பட்ட மனைவி, பிள்ளைகள் தொடங்கி.... ஜீவனுள்ள சபையிலுள்ள சகோதர சகோதரிகள் வரை, அவர்கள் அனைவரையும் நாமும் 'ஒருவரையொருவர், அவர்களின் தூசிகளைக் கழுவி அல்லது மன்னித்து' அவர்களும் நித்திய குடும்பத்தில் பங்கடைய ஆதாயம் செய்ய வேண்டும்!**

*அவரது சபையில் தேவன் தந்த சகோதரனை அல்லது வீட்டில் அவர் தந்த மனைவியை முதலில் அன்பு வைத்தபடியே, முடிவுபரியந்தம் அவர்களிடம் அன்புவைத்ததற்குரிய இரகசியம்.... (ஒருவன் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் செய்த பாவங்கள் தவிர) அவர்களின் 'தூசியான' தவறுகள் அனைத்தையும் உடனுக்குடன் மன்னித்து, கழுவியதேயாகும்! அப்படிச் செய்யவில்லையென்றால், இந்த உலகில் வந்த ஒருவராகிலும்,* **'முடிவுபரியந்தம் ஒருவரை அன்புகூர்ந்திட'** *ஒருக்காலும் இயலாது! ஒரு சகோதரனின் அல்லது தன் மனைவியின் 'பெலவீனத்தை' (தவற்றை) உடனே நான் அவளின் கால்களின் தூசியைக் கழுவாவிட்டால், இயேசு கூறியதைப்போல் "என்னிடத்தில் உனக்கு பங்கில்லை!" என்ற வீழ்ச்சி ஏற்பட்டுவிடும்!*

*"என்னோடுகூட என் மனைவியும் (சகோதரனும்) நித்திய ஜீவனாகிய கிருபைக்கு சுதந்திரம் கொண்டவர்கள்" (1பேதுரு 3:7) என அறிந்தவர்கள் மாத்திரமே, ஒருவரையொருவர் மன்னித்து, அவர்களை ஆதாயம் செய்வார்கள்!* **என் பாவம் எனக்கு மன்னிக்கப்படாமல் போய்விடக்கூடாது! என அஞ்சி, பிறரை மன்னிப்பது ஆரம்ப நிலை கிறிஸ்தவம். ஆனால், என் மனைவியை நான் மன்னிக்காவிட்டால், அவள் என்னோடு நித்தியத்தில் பங்கடைய முடியாமல் போய்விடுமே? என் சகோதரனை நான் மன்னிக்காவிட்டால், அவன் என்னோடு நித்தியத்தில் பங்கடைய முடியாமல் போய்விடுமே?** *என்ற ஆதங்கமே, இயேசு நம்மில் எதிர்நோக்கும் 'பரம குடும்பத்தின்' ஆதங்கம்! பரலோக குடும்பத்தின், ஞானவான்களுக்குரிய இந்த 'ஆத்தும ஆதாயம்' நமக்கும் சொந்தமாகக்கடவது! (நீதி.11:30). ஆமென்.*

*– T.ரத்தினகுமார்*

## டார்ஸியஸ் – தமஸ்கு வாலிபன், (AD 366–384)
## 'நற்கருணை அப்பத்தை' எறிந்திட மறுத்த தீரன்!



தமஸ்கு பட்டணத்தில் வாழ்ந்த இளம் வாலிபன் இந்த டார்ஸியஸ். இந்த டார்ஸியஸ், ஸ்தேவான் காலத்தில் வாழ்ந்தவர். இவருக்கு ஸ்தேவான் நல்லதோர் கண்காணியாய் இருந்திருப்பார் என கருதப்படுகிறது. அந்நாட்களில் ரோமானியர்களின் உபத்திரவங்கள் ஏராளமாய் பெருகி வந்த காலம். டார்ஸியஸ் காலத்தில் பேரரசன் வல்லேரியன் ஆண்டு வந்தார். இவன் அந்தரங்கத்தில் கூடிவந்த கிறிஸ்தவர்களைப் பிடிப்பதும், அவர்களை சிறையிலடைப்பதும் அவனுக்கு கொடுக்கப்பட்ட பணியாக செய்து வந்தான்.

தன்னை கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்து வாழ்ந்த இந்த டார்ஸியஸ், பேரரசன் வல்லேரியன் அனுப்பிய படைகளால் சூழப்பட்டார். அச்சமயத்தில், அந்தரங்கத்தில் கூடிவந்த சபையில் கர்த்தருடைய மேஜை பரிமாறப்பட்ட நேரம். இந்த இளம் வைராக்கியமான டார்ஸியஸை சிறைபிடித்த ரோமானிய வீரர்கள், டார்ஸியஸ் கையில் மூடியிருந்த 'கிறிஸ்துவின் சரீரமாகிய அப்பத்தை' குறிப்பிட்டு அது என்ன? எனக் கேட்டார்கள். அதற்கு டார்ஸியஸ் "இது என்னை இரட்சித்த அன்பு நாதர் இயேசுவின் சரீரத்திற்கு ஒப்பான தூய அப்பம்" என கூறினார். மேலும், இன்றுதான் நான் முதலாவதாக கர்த்தருடைய மேஜையில் இதை புசிக்கும் பாக்கியம் பெற்றிருக்கிறேன் எனவும் சாட்சி கொடுத்தான். அவனை இழுத்துச் சென்ற போர்வீரர்கள் டார்ஸியஸை துன்புறுத்தி "கிறிஸ்துவின் சரீரமாகிய அப்பத்தை" தங்களிடம் ஒப்படைக்கும்படி பலவந்தம் செய்தார்கள். **"நீ சொல்லும் கிறிஸ்துவின் சரீரமான அப்பத்தை நாய்களுக்கு போடுகிறோம்! அதை கொடுக்க மறுத்தால் உன்னைக் கொன்று விடுவோம்!"** என கொடூரமாய் கூறினார்கள். திகைத்து நின்ற டார்ஸியஸ், கையில் வைத்திருக்கும் அப்பம் கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஒப்பானது என்பதையும், அதை நாய்களுக்கு முன் போடுவது **கிறிஸ்துவை காட்டி கொடுப்பதற்கு ஒப்பானது** எனவும் ஆழமாய் உணர்ந்து 'அப்பத்தை' தன் மார்போடு வைத்துக்கொண்டு "நான் இதை நாய்களுக்கு தரப் போவதில்லை, அதற்குப் பதிலாக என்னைக் கொன்றுபோட என்னையே ஒப்படைக்கிறேன்" எனக் கூறி போர்வீரர்கள் கையில் தன் இளமையான ஜீவனை விட்டான்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

# மோட்ச வாசல் பிரவேசம், எளிதல்ல!

சுவிசேஷப் பிரசங்கியார் ஒருவரிடம் ஒரு கிறிஸ்தவ இளைஞன் ஒரு சமயம் வந்து "ஐயா, நீங்கள் என் ஆத்துமாவைக் குறித்துக் கவலை கொள்ளவேண்டிய அவசியமே இல்லை. மோட்சம் செல்லும் திரள் கூட்டத்தினுள் நானும் ஒருவனாக எப்படியாயினும் நழுவிச் சென்று விடுவேன்" என்று கூறினான். அதற்கு மாறுத்தரமாக அந்த ஞானமுள்ள தேவ மனிதன் "தம்பி, நீ ஒரு தவறான இடத்தைப்பற்றிக் கூறுகின்றாய் என்று நான் நினைக்கிறேன். நீ நினைக்கின்ற திரள், திரள் கூட்டமான ஜனம், மோட்சத்திற்கு அல்ல, நரக பாதாளத்தை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது. நீ வேண்டுமானால் சாவதானமாக நழுவி, நரகத்தின் அக்கினி கடலுக்குச் செல்லலாமே தவிர, மோட்சத்திற்குள் நழுவிச் செல்லும் காரியத்திற்கு ஒருக்காலும் இடமே இல்லை" என்று கூறினார். சற்றே நடுங்கிப்போய்விட்ட அந்த இளைஞன் 'இப்போது' தன் ஆத்துமாவிற்காக மெய்யாகவே கரிசனை கொள்ளத் துவங்கினான்.

மேற்கண்ட அந்த இளைஞனைப் போலவே, இன்று அநேகர் மோட்சம் செல்லுவது அத்தனை எளிது என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ".... கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" (மத் 7: 13,14) என்றும் "அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்ட வர்களோ சிலர்" (மத். 7:14) என்றும், கர்த்தருடைய வார்த்தை தெளிவாகக் கூறுகின்றது. நோவா காலத்துப் பூர்வ உலகத்தின் முழு ஜனத்திரளிலும், தேவனின் கிருபைப் பேழைக்குள் கடந்து சென்றோர் இரு கை விரல்களின் எண்ணிக்கையில் அடங்கும் குறைவான எட்டுப்பேர் மாத்திரமே!

நாம் கிறிஸ்து இரட்சகரில், ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட நன்னாளில் பெற்ற நம்முடைய இரட்சிப்பே, நம்மை நித்தியானந்த மோட்ச இன்ப நாட்டிற்கு அழைத்துச் செல்லக்கூடியது!

தான் பாவி என்று உணர்வடைவதும்! தன் பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடுவதும்! கிறிஸ்துவுக்குள் பழைய வாழ்க்கை ஒழிந்து..... புதிய வாழ்க்கை துவங்குவதுமே, நம்மை பரலோக ராஜ்ஜியத்திற்குள் இட்டுச்செல்லும் விலையேறப் பெற்ற இரட்சிப்பு!!

*- சுவிசேஷ மலர்*

பரலோக பொக்கிஷங்கள்

Published by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by The Orient Litho Press, Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.